விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 083 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 28 புதன்கிழமை (12.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அநுராதபுரம் வைத்தியசாலையில்
# பெண் வைத்தியர்
# பாலியல் துஷ்பிரயோகம்
### இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவரால் கத்திமுனையில் அரங்கேற்றப்பட்ட கொடூரம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணராகப் பயிற்சி பெற்றுவரும் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற ஒருவரால் கத்திமுனையில் இக்கொடூரம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம்

## அநுராதபுரம் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் கத்தி முனையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்திற்கு

02ஆம் பக்கம் பார்க்க

## பெண் வைத்தியர் துஷ்பிரயோகம் உடன் நடவடிக்கை எடுக்குக
### சபையில் சஜித் வலியுறுத்து

(கொழும்பு)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம

15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு நேரில் விஜயம் செய்து
# நியாயமான முறையில் தீர்வு வழங்குவேன்
### புத்தசாசன அமைச்சர் சுனில் செனவி



(கொழும்பு)

வலி வடக்கில் கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு நேரில் விஜயம் செய்து அங்கு காணப்படும் காணிப் பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வு வழங்குவேன் எனப் புத்தசாசன அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றில் முன்னிலையாகுக
### மைத்திரிக்கு அறிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றத் தவறியமை தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி உரிய விளக்கமளிக்குமாறு முன்னாள்

15ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில்
## கிராமசேவகர் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கிராமசேவகர் மீது தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலை நடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால்

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சியில் இணைந்தார் விந்தன்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண முன்னாள் உறுப்

02ஆம் பக்கம் பார்க்க

## அதானி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை
### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

அதானி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. மக்களுக்கு சுமையாக அமையும் வேலைத்திட்டங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பொருத்தமான வேலைத்

02ஆம் பக்கம் பார்க்க

### அரச சேவையில்
## புதிய நியமனங்களுக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அரச சேவையில் புதிய நியமனங்களை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

9 அமைச்சுகள் மற்றும் 2 மாகாண சபைகளுக்காக 5 ஆயிரத்து 882 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்

15ஆம் பக்கம் பார்க்க

### கோப்பாயில்
## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## மழையுடனான வானிலை வடக்கில் தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் இன்றும் மழை தொடர வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா எதிர்வு கூறியுள்ளார்.


வானிலை தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




07.03.2025ஆந் திகதியில் இருந்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று யாழ். சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தில் பணியாற்றும்

**திரு. மார்க்கண்டு கண்ணதாசன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மென்மேலும் உயர்வுகள் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் இன்று (12.03.2025) புதன்கிழமை பிறந்த நாளைக் கொண்டாடும் அவருக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்:
செ.செல்வச்சந்திரன் (மாமா) குடும்பத்தினர்
தும்பளை தெற்கு, பருத்தித்துறை.

(C-2444)



## வேலை ஆட்கள் தேவை

கிளிநொச்சி மாநகரில் பிரபல்யம் வாய்ந்த கனகபுரத்தில் அமைந்துள்ள செல்லா ஹோட்டல் நிறுவனத்திற்கு சமையலாளர், சமையல் உதவியாளர், ஹோட்டல் அறைகள் சுத்திகரிப்பாளர் மற்றும் டெலிவரி பாய் போன்ற வேலை வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகிறது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தகைமை உடையவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **077 744 2846**

(872)


## மரண அறிவித்தல்



மலர்வு 05 - 06 - 1963

உதிர்வு 11 - 03 - 2025

### திரு. குலவீரசிங்கம் முருகதாஸ்

(ஓய்வு நிலை உத்தியோகத்தர் நீர்ப்பாசன திணைக்களம் – கிளிநொச்சி, குயின்ஸ் Travel – உரிமையாளர், கிளிநொச்சி)

2ம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 56/3 திருவையாறினை நிரந்தர வசிப்பிடமாகவும் 154, A9 பிரதான வீதி, இரணைமடு திருமுறிகண்டியினை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் முருகதாஸ் அவர்கள் நேற்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலவீரசிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயலதாவின் பாசமிகு கணவரும் விமலராணியின் அன்புச் சகோதரரும் திவாகர் (அருள்முருகன் Agro Center கிளிநொச்சி), பார்த்தீபன் (குயின்ஸ் Travel - கிளிநொச்சி), டிஷாந்தினி (ஆசிரியர் - மாங்குளம் மகா வித்தியாலயம்), தட்சாயினி (World vision - கிளிநொச்சி), மதுசாயினி (மாணவி - திறந்த பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேணுகா (MPCS - பண்டத்தரிப்பு), தினோஜன் (மருத்துவ பிரதிநிதி - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவீஷனின் பாசமிகு பேரனும் ஜெயக்குமார், இராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.03.2025) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொன்னகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-2448)

## மழையுடனான...

நாளை மற்றும் நாளைமறுதினம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழையற்ற அல்லது மிகக் குறைவான மழையுடன் கூடிய வானிலை நிலவும்.

பின்னர் 15.03.2025 முதல் 25.03.2025 வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்கு மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றார். (ம-7)

## அதானி...

திட்டங்களை அதானி முன்வைத்தால் அது குறித்து ஆராயப்படும் என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை (11) இடம் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அதானி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. ஜனாதிபதி இந்திய விஜயத்துக்கு முன்னர் இருந்த நிலைப்பாட்டில் அவரது இந்திய விஜயத்தின் பின்னர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவது உண்மையல்ல. நாம் முதலீடுகளை ஊக்குவிக்கின்றோம். அந்த வகையில் எமக்கு பொருத்தமான முதலீட்டுக்கான முன்மொழிவுகளை அதானி நிறுவனம் முன்வைத்தால் அது தொடர்பில் வெளிப்படையாகப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் என்றார். (ம-7)

## தமிழரசுக்...

பினருமான விந்தன் கனகரட்னம் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

ரெலோ அமைப்பின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்து முன்னாள் மாநகர சபை மாகாண சபை உறுப்பினர்களில் ஒருவராக இருந்து முன்னாள் மாநகர சபை மாகாண சபை உறுப்பினராக இருந்த விந்தன் கனகரட்னத்துக்கும் கட்சிக்கும் இடையில் அண்மைக்காலமாக முரண்பாடுகள் ஏற்பட்டு வந்திருந்தன.

இந்நிலையில், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் முன்னிலையில் தமிழரசுக் கட்சியில் இணைந்து உறுப்புரிமையை பெற்றுக் கொண்டுள்ளார். அவருடைய மகனும் இணைந்துகொண்டு உறுப்புரிமையை பெற்றுக்கொண்டார். (ம-7)

## அநு...

எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வைத்தியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டுமென வைத்தியர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)


## வேலையாள் தேவை

தேசிய லொத்தர் சபையின் அலுவலகத்திற்கு கணனி அறிவுடைய பெண் ஊழியர் தேவை.

காலை 9.00 மணியிலிருந்து தொடர்பு கொள்ளலாம்.

**077 603 1723**

(3642)





## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவகால தற்காலிக கடை ஏலம்

எதிர்வரும் 22.03.2025 ஆரம்பமாகவுள்ள மகோற்சவத்தை முன்னிட்டு தற்காலிக கடை அமைப்பதற்கான ஏலம் கூறல் 16.03.2025 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும்.

**077 757 0104**

செயலாளர்
தர்மகர்த்தா சபை

(C-2449)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு. ஏ.சிறிறங்கன் அவர்களது பாசமிகு தந்தை

*அமரர்*

**வெற்றிவேற்பிள்ளை ஏகாம்பரநாதன்**



அவர்கள் இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடந்தேனும் நீதி நிலைநாட்டப்படவேண்டும்

## இல்லாவிடின் கிளீன் சிறீலங்கா என்பதும் போலியே

## அருட்தந்தை சத்திவேல்

(நெளுக்குளம்)

**தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க் கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் பிரதம மந்திரியும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவோடு ஆல்ஜசீரா ஊடகவியலாளர் நடத்திய நேர்காணலைத் தொடர்ந்து தெற்கில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக மக்களின் கொந்தளிப்பு எழுந்துள்ளது

யுத்த காலப்பகுதி தொடர்பிலும் யுத்த இறுதி கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தவை தொடர்பிலும் அப்பேட்டியில் கேள்விகள் கேட்கப்பட்டன.

அவற்றிற்கும் பதில் அளிக்க ரணில் தடுமாறி யதை நாம் அறிவோம். ஆனால் அதைப் பற்றி எல்லாம் கரிசனையோ அக் கறையோ இல்லாத மன நிலையையும் படலந்த குற்றங்களை முன்னிலைப்படுத்தி தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோருவது பக்கச்சார்பானதாகும்.

படலந்த வதைமுகா மோடு தொடர்புபட்டவர்கள் அதற்குத் துணை நின்ற பாதுகாப்புத் தரப்பினரும் நீதி முன் நிறுத்தப்பட்டு தண்டிக் கப்பட வேண்டியவர்களே. அதில் மாற்றுக் கருத்து இல்லை காலம் கடந்தேனும் நீதி நிலைநாட்டப்படல் வேண்டும். உண்மை முழு நாட்டுக்கும் தெரிய வேண்டும்.

தற்போதைய ஆட்சியாளர் ரணிலுக்கு எதிராக விசாரணை நடத்துவதாகக் கூறுவது போல் தங்கள் மன சாட்சியை தொட்டு வடக்கு-கிழக்கு யுத்தம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தினால் மட்டுமே இவர்களின் கிளீன் சிறீலங்காவிற்கு நீதி கிட்டும் இல்லையேல் அதுவும் போலியே.

இலங்கை வரலாற்றில் எல்லாக் காலப்பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்ட இன சுத்திகரிப்பு, இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் எல்லாவற்றுக்கும் இதய சுத்தியோடு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் யுத்தக் குற்றம் விசாரிக்கப்பட வேண்டும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இதுவரை காலமும் படலந்த வதைமுகாம் தொடர்பாக அமைதி காத்தவர்கள் எல்லாம் இன்று வாய் திறக்கிறார்கள் எனில் அதற்கு அல் ஜஸீரா சர்வதேச ஊடகமே காரணமாகும்.

அதைப் போன்று தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள், அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள், கொலை யாளிகள், இனவாதிகள் என்பதே உண்மை என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-299)

# தேசபந்துவுக்கு பிடியாணை



(கொழும்பு)

இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை உடனடியாகக் கைது செய்வதற்கான திறந்த பிடியாணையை மாத்தறை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (CID) விடுத்த வேண்டுகோளின் பேரில் நேற்று இந்த திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு வெலிகமாவில் உள்ள ஒரு முக்கிய ஹோட்டலில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தேடப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அரச சேவைகளில்

## வெற்றிடங்களை நிரப்ப அனுமதி

(கொழும்பு)

அரசு சேவைகளில் 5,882 வெற்றிடங்களை நிரப்ப அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சகம் 2500 வெற்றிடங்களை நிரப்ப உள்ளது.

இது அதிக எண்ணிக்கையிலான ஆட்சேர்ப்புகளாகும்.

பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு 1615 பேரை ஆட்சேர்ப்பு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள், நீதி மற்றும் கல்வி போன்ற பல முக்கிய அமைச்சகங்களாலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளன. (நி)

# 155,976 புதிய வாக்காளர்கள்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் 155,976 புதிய வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும்,

கடந்த வருடம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தகுதி பெற்ற வாக்காளர்களுக்கு மேலதிகமாக இந்தப் புதிய வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

புதிய வாக்காளர்கள் 2024 ஒக்டோபர் 1 மற்றும் 2025 பெப்ரவரி 1 ஆகிய திகதிகளில் சான்றளிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, இந்த ஆண்டு திட்டமிடப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலுக்காக மொத்தம் 1,729,330 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிகமாக தேர்தலுக்கான தபால்மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இன்றுடன் முடிவடையும் என்று ஆணையம் தெரிவித்துள்ளது. (நி)

# கல்வி ஆணைக்குழு விரைவில் ஸ்தாபிப்பு

## தொழில் பிரதி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடு மற்றும் சேவை நிலையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைய கல்வி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும். என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு ஆசிரியர் சேவையில் 7913 நியமனங்கள் வழங்கப்படும்.

அதிபர் சேவையில் 1610 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. கடந்த ஜனவரி மாதம் நிர்வாக மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதேபோல் கல்வி நிர்வாக, சேவையில் 1331 வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் 422 பேருக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பதவிக்கான பரீட்சை நடைபெற்றது. இருப்பினும் நியமனங்கள் வழங்கப்படவில்லை.

ஆசிரியர் கல்வி சேவையில் 1310 வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் முதல் கட்டமாக 706 பேருக்கு நியமனங்களை வழங்குவற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் பெரும்பாலான பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்று பெயர் பலகைகளின் ஊடாக மாத்திரம் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் எவ்வித வளங்களும் வழங்கப்படவில்லை. அனைத்து பாடசாலைகளுக்கும் இணையான வளங்களை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.


ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடு மற்றும் சேவை நிலையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைய கல்விச் சபையை உருவாக்குவதற்கு கல்வி அமைச்சர் எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்கு நிருபம் சமர்ப்பிப்பார். அதனைத் தொடர்ந்து கல்வி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ராகுல், யாதவ் விலகல்?




18 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் மே 25 ஆம் திகதி வரை நடக்கிறது. இதன் தொடக்க லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல் கத்தா நைட் ரைடர்ஸ், பெங்களூர் ராயல் சேலஞ்சர்சை சந்திக்கிறது.


இந்த தொடருக்கான டில்லி கேப் பிட்டல்ஸ் அணி கடந்த நவம்பர் மாதம் நடந்த ஏலத்தில் விக்கெட் கீப்பர் மற்றும் பட்ஸ்மேனான லோகேஷ் ராகுலை ரூ.14 கோடிக்கு வாங்கியது.

இந்நிலையில் அவர் இந்த ஐ.பி.எல் தொடரின் முதல் சில பாதிகளைத் தவறவிட வாய்ப்பு உள்ளது. அந்த வகையில் ராகுல் மனைவிக்கு இந்த மாதம் இறுதியில் அல்லது அடுத்த மாதம் தொடக்கத்தில் முதல் குழந்தை பிறக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் ராகுல் ஐ.பி.எல். போட்டியின் தொடக்கத்தில் சில ஆட்டங்களை தவறவிடுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேபோல் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியில் இடம் பிடித் திருக்கும் வேகப்பந்து வீச்சாளர் மயங்க் யாதவ் முதுகில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். தற்போது அவர் பெங்களூரில் உள்ள இந்திய கிரிக்கெட் வாரிய அக்கடமியில் காயத்தில் இருந்து மீளுவதற்கான பயிற்சியை எடுத்து வருகிறார்.

அவர் எப்போது முழு உடல் தகுதியை எட்டுவார் என்பது தெரிய வில்லை. இதனால் அவர் ஐ.பி.எல். தொடரில் தொடக்கத்தில் சில ஆட் டங்களை தவறவிட வாய்ப்புள்ளது. மயங்க் யாதவை லக்னோ அணி ரூ.11 கோடிக்கு தக்கவைத்தது என் பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சதமடித்து சங்கா அசத்தல் இலங்கை மாஸ்டர்ஸ் வெற்றி




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி-20 போட்டியில், இலங்கை மாஸ்டர்ஸ் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது.

ராஜ்பூரில் நேற்று முன் தினம் நடந்த போட்டியில் இலங்கை மாஸ்டர்ஸ் மற் றும் இங்கிலாந்து மாஸ் டர்ஸ் அணிகள் மோதின.

முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணியில் இயன் மோர்கன் 10 ஓட்டங்களிலும், ஆம்புருஸ் 17 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் அரைசதம் அடித்த மஸ்டர்ட் 39 பந்துகளில் 3 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்கள் எடுத்து உதானா ஓவரில் அவுட் ஆனார்.

அதனைத் தொடர்ந்து மேடி (15) ஸ்கோஃபில்ட் (1) ஆட்டமிழக்க, பிரெஸ்னன் 18 ஓட்டங்களும், ட்ரெம் லெட் 14 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதன்மூலம் இங்கிலாந்து மாஸ்டர்ஸ் 5 விக்கெட்டுக்கு 146 ஓட்டங்கள் எடுத்தது. உதானா, தில்ருவன், குணரத்னே, சதுரங்கா மற்றும் மெண்டிஸ் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய இலங்கை அணியில் ரோமேஷ் 16 ஓட்டங்கள் அவுட் ஆக, அணித்தலைவர் குமார சங்ககாரா ருத்ரதாண்டவம் ஆடி னார்.

அதிரடி சதம் விளாசிய அவர் 47 பந்துகளில் 1 சிக்ஸர், 19 பவுண் டரிகளுடன் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்கள் குவித்தார்.

அவருடன் பார்ட்னர்ஷிப் அமைத்த அசேல குணரத்னே 22 (12) ஓட்டங்கள் எடுக்க, இலங்கை அணி 12.5 ஓவரில் இலக்கை எட்டி அபார வெற்றி பெற்றது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3311

**ரிஷிகேசன்**

நம்ம வீட்டு விடயம் நம்மளோட இருக்கனும்டி வீட்டு மானம் வெளிய போகக்கூடாது தெரிஞ்சுதா



அப்புறம் ஏன் நான் அடிச்சா நாலு தெருவுக்கு கேட்க கத்துறீங்கள்

**அஸ்மிதா**

போ... போ... ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி மேட்ச் முடிஞ்சு போச்சு



இன்னும் 13 நாளில ஐ.பி.எல் வருது அதுக்கு ரெடியாகு...

**சகிந்தவி**

விவரம் தெரியாத போது இவர் மட்டும் தான் நடிகர் திலகம் என்று நினைச்சிட்டு இருந்தோம்



போக போகத்தான் தெரிஞ்சுது நம்மள சுத்தி எல்லாருமே நல்லா நடிக்கிற நடிகர் திலகம் என்று...

**ஷோபிதா**




**விகான்**

நேற்று ஒரு புத்தகம் பார்த்தேன்... வாழ்க்கையில் 50% பிரச்சினைகளை




பேசாமல் இரண்டு புத்தகம் வாங்கிற்றேன் எப்படி?

**அர்ச்சனா**

அத்தியாவசியத்துக்கு செலவு பண்ணும் நாமளே இவ்வளவு கடன்காரனா இருக்கிறோமே



ஆடம்பர செலவு பண்ணுறவங்கள் எல்லாம் எப்படியோ

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும திட்டம் சிறப்புடன் செயலாற்றும் வடக்கு

## நலன்புரி நன்மைகள் சபை ஆணையாளர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அஸ்வெசும திட்டத்தின் நடைமுறையாக்கத்தில் ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணமே சிறப்பாகச் செயற்படுகின்றது என நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளரும், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் தலைவருமான ஜயந்த விஜயரட்ண தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில், மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டச் செயலர்கள், அனைத்துப் பிரதேச செயலர்களுடனான விசேட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஆளுநர் இங்குள்ள மக்களின் பிரச்சினை தொடர்பில் எம்முடன் மூன்று மாதங்களுக்கு முன்னரே கலந்துரையாடியதுடன் இங்குள்ள பிரச்சினைகளை விரைந்து தீர்க்குமாறும் கோரி அழைத்திருந்தார்.

அதற்கு அமைவாக நாங்கள் இங்கு வந்துள்ளோம். ஆளுநர் குறிப்பிட்டுள்ள மனுக்களை மீளாய்வு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.


அதனை எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை "1924" என்ற ஹொட் லைன் இலக்கத்துக்கு வேலை நாட்களில் காலை 8.30 மணியிலிருந்து பி.ப. 4.30 மணி வரையில் தொடர்பு கொள்வதன் ஊடாக நலன்புரி நன்மைகள் சபையின் ஊடான அஸ்வெசும தொடர்பான முறைப்பாடுகளை எவரும் முன்வைத்து தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என ஜயந்த விஜயரட்ண தெரிவித்தார். (6-8)

# மணிவிழா வாழ்த்துக்கள்

## திரு. கோபாலர் சிற்சபேசன்

(BSc, P.G.D in Ed, MSc, P.G.D in TESL)
06.03.2025




### சேவை விபரம்

- யாழ்/ யாழ்ற்றன் கல்லூரி (1993 - 1996)
- யாழ்/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை (1996-1998)
- யாழ்/வயாவிளான் மத்திய கல்லூரி (1999 - 2000)
- யாழ்/ இளவாலை கன்னியர் மடம் ம.வித்தி (2000- 2003)
- கிளி/ முரசுமோட்டை முருகானந்தா ம.வித்தி (2003- 2006)
- கிளி / பரந்தன் இந்து மகா வித்தியாலயம் (2007-2012)
- யாழ்/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை(2012- 2021)
- யாழ்/ குப்பிளான் மகா வித்தியாலயம் (2021-2023)
- யாழ்/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை (2023-2025)

எமது கல்லூரியின் ஆசிரியராக சேவையாற்றி ஓய்வு பெறும் **திரு. கோபாலர் சிற்சபேசன்** அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-2440)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை:** மானிப்பாய் கிராம உப அலுவலகம்
**விண்ணப்பதாரரின் பெயர் :** தம்பு இராசேந்திரம்
**முகவரி :** ஆதன இல: 323,325/ 3 வீதி: நவாலி வட்டாரம்:11

வட்டாரம் 11. நவாலி வீதி, ஆதன இலக்கம் 323,325/3 இல் அமைந்துள்ள, வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு "கண்டாவத்தை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 12 குளி 4.16 விஸ்தீரணமுள்ள இவ் ஆத்னாங்களை மானிப்பாயைச் சேர்ந்த வயிரவி தம்பு கைம்பெண் நல்லம்மா என்பவரால் "இவ் ஆதனாங்களின் உரிமையாளர் தாமே" என யாழ்ப்பாணம் சமாதான நீதிபதி ஏ.சின்னத்துரை அவர்களால் எழுதப்பட்ட 1989.05.08 ஆம் திகதிய சத்தியப் பத்திரத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் பிரசித்த நொத்தாரிசு எஸ்எஸ்.இராசநாயகம் அவர்களால் எழுதப்பட்ட 1540ஆம் இலக்க 1990.06.13ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தம்பு இராசேந்திரம் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 13501 ஆம் இலக்க 03.11.2023 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 12 குளி 4.16 கொண்ட இவ் ஆதனாங்களின் எல்லைகள் பின்வருமாறு,

வடக்கு - பொன்னையா சௌந்தரநாயகம்
கிழக்கு - தம்பு செல்வராசா & ஒழுங்கை முகப்பும்
தெற்கு - ஒழுங்கை
மேற்கு -பாதை

மேற்குறித்த ஆதனத்தை தம்பு இராசேந்திரம் எனும் பெயரில் ஆதனப் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரில் ஆதனப் பதிவு மேற்கொள்ளப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(3630)

செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் கொழும்பு - 07 இல் அமைந்திருக்கும் ஈரான் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் பிரபல இலங்கை வானொலி அறிவிப்பாளரும் முன்னாள் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவியுமான புர்கான் பீ இப்திகார் அவர்கள் எழுதி வெளியிட்ட "அகல் விளக்கு" எனும் நூலின் பிரதியொன்றை கலாபூஷணம் பரீட் இக்பால் பெறுவதைப் படத்தில் காணலாம். அருகில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன், பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இலங்கைக்கான ஈரான் தூதரக கலாசார ஆலோசகர் கலாநிதி பி.மொஸாமி கூதர்ஸி ஆகியோரையும் காணலாம்.

(சி-2438)

# யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் - வகை II
2. யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் - வகை II
3. யா/யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை - வகை III
4. யா/நல்லூர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை - வகை II
5. யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் - வகை II
6. யா/அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை- வகை II
7. யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் - வகை II

**தகைமைகள்:**

- ◆ வகை III, பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- ◆ வகை II, பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் II** மற்றும் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- ○ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருடகாலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- ○ விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவுசெய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி உதவி, அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

**குறிப்பு:**

- ○ விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக்கல்விப் பணிப்பாளரூடாக **2025.03.26** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2025"** எனக் குறிப்பிடவும்.

**திருமதி. மாலதி முகுந்தன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்- யாழ்ப்பாணம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(சி-2437)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்பயிற்சியினை பயில இளையோர்கள் முன்வர வேண்டும்

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் ஊடான சான்றிதழ் கற்கைநெறிகளை ஏனைய மாகாணங்கள் பயன்படுத்துவதைப்போன்று எமது வடக்கு மாகாணம் பயன்படுத்தவில்லை என்பது கவலைக்குரிய விடயம் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்டத்திலுள்ள கற்கை நிலையங்களில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு என்.வி.கியூ. சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். நாச்சிமார் கோவிலடியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் போருக்கு முன்னர் அதிகளவான தொழிற்சாலைகள் இயங்கின. அதன் ஊடாக அதிளவானோர் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருந்தனர். ஆனால் தற்போது அவ்வாறான தொழிற்சாலைகள் இல்லை. அதனால் வேலை வாய்ப்பின்மை பிரச்சினையாக இருக்கின்றது.

பல முதலீட்டாளர்கள் எமது மாகாணத்தை நோக்கி வருகின்றார்கள். எதிர்காலத்தில் தொழிற்சாலைகள் புதிதாக உருவாக இருக்கின்றன. எனவே இவ்வாறான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் நீங்கள் அதில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

எனவே எமது மாகாணத்தைச் சேர்ந்த இளையோரும் இந்தக் கற்கைநெறிகளை அதிகளவில் பயன்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர், யாழ். மாவட்டச் செயலர் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (நி-6)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தொழிற்சந்தை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்களுக்கான உள்ளகத் தொழில்சார் பயிற்சிகளை வழங்க முன்வரும் நிறுவனங்களை அடையாளங் காணும் நோக்குடனும், முன்னெடுக்கவுள்ள 'தொழிற்சந்தை-2025' இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கலைப் பீடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகின் உதவியுடனும் 'சேவ் எ லைவ்' அமைப்பின் அனுசரணையுடனும் முன்னெடுக்கவுள்ள இவ் தொழிற்சந்தையினை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

60 இற்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்கும் இத் தொழிற்சந்தையில் கலைப் பீடத்தில் நான்காம் வருடம் மற்றும் மூன்றாம் வருட சிறப்புக்கலை மற்றும் பொதுக்கலை பயிலும் மாணவர்களும், யாழ்.பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை, பொதுக்கலைப் பட்டங்கள் பெற்று, வேலை வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளும் நேரடிப் பயனாளிகளாக இணைந்து கொள்ளவுள்ளனர். (நி-6-33)

# வடமராட்சியில் மீன்பிடி வலைகள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 71 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் மீன்பிடி வலைகள் கூட்டுறவு சங்கத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நிதியில் இருந்து உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த 71 பயனாளிகளுக்கு எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# யாழ்.முல்லையில் கட்டுப்பணம் செலுத்திய தமிழரசுக் கட்சி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சி யாழிலும் முல்லையிலும் நேற்று கட்டுப்பணத்தை செலுத்தியது.

யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் யாழில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கும், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் முல்லை மாவட்டத்திலுள்ள 4 உள்ளூராட்சி சபைகளுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனும் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். (நி-6-33-299)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc, MSc, Surveyor (pvt)<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15201 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம் : பூரம்<br>8 இல் செவ்<br>கி.பா: 51 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BEng<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15202 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: BBA, Manager (UK)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15203 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>10 இல் சூரி செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Optical Staff (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15204 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 15 ¼<br>9 இல் சூரி செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L, Canada<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/15205 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBM, Following MSc, Bank<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/15206 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/ஸ்ரீசோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலையின் செயற் பட்டு மகிழ்வோம் நிகழ்வு-2025 இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் செ.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக யா/யூனியன் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் க.இரத்தினகுமார் (சோமாஸ்கந்த கல்லூரி யின் பழைய மாணவன்), சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலக செயற் பட்டு மகிழ்வோம் செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவ கோவிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலா நாள் கருத் தரங்கு நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத்தின் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் வளவாளராக இயற்கை விவசாய ஆர்வலரும் சமூக சேவையாளருமான சி.சுந்தரேஸ்வரன் கலந்து கொண்டு 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்னும் தலைப்பிலான கருத்துரையை வழங்கவுள்ளார். (நி-6)

# மகளிர் தினத்தை முன்னிட்டு யாழில் கவனயீர்ப்பு பேரணி



(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று யாழில் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணியானது பான்ட் இசையுடன் நல்லூர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பித்து கிட்டுப்பூங்கா வரை நடைபவனியாக சென்று பின்னர் கிட்டுப் பூங்காவில் பொதுச்சுடர் ஏற்றி மகளிர்களின் உரைகள் இடம்பெற்றன.

"பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்கு, பாலியல் குற்றங்களை துரிதமாக விசாரிக்க நடமாடும் நீதிமன்றங்களை உருவாக்குக, பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்களை அரச புலனாய்வாளர்கள் பின் தொடர்வது, தொலைபேசியில் அழைப்பது, புகைப் படம் எடுப்பது, விசாரணை செய்வதை உடன் நிறுத்துக" என்ற வாசகங்கள் எழுதிய பதாகையை தாங்கியவாறு வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினால் இந்த பேரணியானது முன்னெடுக்கப்பட்டது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

# பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

சங்கரப்பிள்ளை கணேசலிங்கம் கௌரவ பொதுச் செயலாளர் புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயப் பரிபாலனசபை, புற்றளை சித்தி விநாயகர் ஆலயம், புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.

புலோலி தெற்கு, புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை சார்பாக

**<u>வழக்காளி</u>**

வழக்கு இல:-நானாவிதம் /1694/2025

**எதிர்**

01. சின்னத்தம்பி தியாகராசா ஆத்தியடி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.
02. இராமநாதன் சிறீதரன் கணனி வளநிலையம் வடமராட்சி கல்வி வலயம், புலோலி.
03. மார்கண்டு தவலிங்கம் புற்றளை புலோலி தெற்கு, புலோலி.
04. நடராசா சர்வானந்தா மந்திகை - வல்லிபுர கோவில் வீதி, மந்திகை.
05. கந்தப்பசேகரம் பாரமேஸ் சாரையடி, புலோலி தெற்கு, புலோலி.
06. ஞானப்பிரகாசம் கோகிலன் (கோகுலன்) புற்றளை வீதி, புற்றளை, புலோலி தெற்கு, புலோலி

**<u>எதிராளிகள்</u>**

மேற்குறித்த வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட வழக்காளியினால் மேலே பெயர் குறிக்கப்பட்ட எதிராளிகளுக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அ) குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழ் வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கும், ஒரு செய்திப் பத்திரிகையில் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தல் குறித்தும் பொருத்தமான ஒரு கட்டளையும்;

(ஆ) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையானது புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபையின் கீழான ஒரு அமைப்பு என்ற பிரகடனமும் தீர்ப்பும்;

(இ) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழுவானது பரிபாலனசபையின் முகாமைத்திட்டத்தின் பிரிவு 24இன் கீழ் நியமிக்கப்பட வேண்டியது என்ற கட்டளையும் தீர்ப்பும்;

(ஈ) 18/08/2024ம் திகதி நடாத்தப்பட்டதாக சொல்லப்படுகின்ற "புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை" யின் கூட்டம் வெற்றும் வெறிதானதும் (Null and Void) என்ற கட்டளையும் தீர்ப்பும்;

(உ) "புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை" யின் இயக்குனர் குழு தெரிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற 18/08/2024 திகதிய தெரிவு வெற்றும் வெறிதானதும் (Null and void) என்ற கட்டளையும் தீர்ப்பும்;

(ஊ) 12/01/2025ம் திகதிய தீர்மானத்தின்படி (XI) எதிராளிகள் புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையில் இயக்குனர் குழுவில் வகித்ததாக சொல்லப்படுகின்ற அனைத்து பதவிகளையும் இழந்துவிட்டார்கள் என்ற கட்டளையும், தீர்ப்பும்;

(எ) 12/01/2025ம் திகதிய தீர்மானத்தின்படி (XI) இயக்குனர் குழு தனது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து ஆவணங்களையும், வங்கிப் புத்தகங்களையும் புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் நிர்வாகசபையிடம் கையளிக்க வேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்;

(ஏ) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் அனைத்து ஆவணங்களையும், வங்கி ஆவணங்களையும் எதிராளிகள் புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையிடம் கையளிக்க வேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்;

(ஐ) இடைக்காலத் தடைக்கட்டளைக்கான விண்ணப்பம் விசாரணை செய்யப்பட்டு, கட்டளையாக்கப்படும் வரையில் எதிராளிகள் மற்றும்/அல்லது அவர்களது ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்களை பின்வருவனவற்றில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கும் வகையில் ஒரு **<u>கட்டாணைக்கான கட்டளை-</u>**

(I) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மற்றும் அதனது அசையும் அசையா சொத்துக்களை மற்றும்/அல்லது புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் அசையும் அசையா சொத்துக்களை கையாள்வதிலிருந்தும்;

(II) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் வங்கிக் கணக்குகளை கையாள்வதிலிருந்தும்;

(III) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் தம்மை பிரதிநிதித்துவப்படுத்துவதிலிருந்தும்;

(IV) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதிலிருந்தும்;

(V) புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயத்தின் மற்றும்/அல்லது ஆலய நிர்வாகத்தின் மற்றும்/அல்லது பரிபாலனசபையின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும் மற்றும்/ அல்லது அவற்றில் தலையிடுவதிலிருந்தும்;

(ஒ) வழக்கு விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்படும் வரையில் எதிராளிகள் மற்றும்/அல்லது அவர்களது ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்களை பின்வருவனவற்றில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கும் வகையில் ஒரு **<u>இடைக்காலத் தடைக்கட்டளை-</u>**

(I) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மற்றும் அதனது அசையும் அசையா சொத்துக்களை மற்றும்/அல்லது புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் அசையும் அசையா சொத்துக்களை கையாள்வதிலிருந்தும்;

(II) புற்றள்ளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் வங்கிக் கணக்குகளை கையாள்வதிலிருந்தும்;

(III) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் தம்மை பிரதிநிதித்துவப்படுத்துவதிலிருந்தும்;

(IV) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதிலிருந்தும் ;

(V) புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் மற்றும்/அல்லது ஆலய நிர்வாகத்தின் மற்றும்/அல்லது பரிபாலனசபையின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும் மற்றும்/அல்லது அவற்றில் தலையிடுவதிலிருந்தும்;

(ஓ) எதிராளிகள் மற்றும்/அல்லது அவர்களது ஊழியர்கள், முகவர்கள் அல்லது வேறு நபர்களை பின்வருவனவற்றில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கும் வகையில் ஒரு **<u>நிரந்தரத் தடைக்கட்டளை:</u>**

(I) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மற்றும் அதனது அசையும் அசையா சொத்துக்களை மற்றும்/அல்லது புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையின் அசையும் அசையா சொத்துக்களை கையாள்வதிலிருந்தும் ;

(II) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் வங்கிக் கணக்குகளை கையாள்வதிலிருந்தும்;

(III) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் தம்மை பிரதிநிதித்துவப்படுத்துவதிலிருந்தும் ;

(IV) புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையின் இயக்குனர் குழு மற்றும்/அல்லது அதிகாரமளிக்கப்பட்ட இயக்குனர் குழு என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதிலிருந்தும்;

(V) புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயத்தின் மற்றும்/அல்லது ஆலய நிர்வாகத்தின் மற்றும்/அல்லது பரிபாலனசபையின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும் மற்றும்/அல்லது அவற்றில் தலையிடுவதிலிருந்தும்;

(ஔ) **செலவுகள் ; மற்றும்**

(ஃ) இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றம் வழங்கக் கூடிய வேறு ஏதேனும் நிவாரணங்கள்.

மேலும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 28/02/2025ம் திகதிய கட்டளை மூலம் பிராதின் வேண்டுதல் பகுதியில் கோரப்பட்டதற்கமைவாக குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் இந்த வழக்கு தொடர்பிலான அறிவித்தலை பிரசுரிக்குமாறு பணித்து கட்டளையாக்கியுள்ளது.

ஆதலால், மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக வழக்குச் செலவு உட்பட மேற்குறிப்பிட்ட நிவாரணங்களை கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்று அறியத்தரப்படுகின்றது.

இவ் வழக்கு 2025ம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும்.

நீதிமன்ற கட்டளையின் படி
2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**பருத்தித்துறை.**

(3629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## உலகின் மிகப்பெரிய

# இயற்கை எரிபொருள் தேக்கம் பிரான்ஸில் கண்டுபிடிப்பு!



(பாரிஸ்)

பிரான்சில் உலகின் மிகப்பெரிய இயற்கை எரி பொருள் தேக்கம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அந் நாட்டு அரசு அறிவித்துள் ளது. குறித்த அறிவிப்பா னது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத் தியுள்ளது.

92 டிரில்லியன் டொலர் மதிப்புடைய உலகின் மிகப் பெரிய வெள்ளை ஹைட் ரஜன் களஞ்சியத்தையே பிரான்ஸ் அரசு கண்டு பிடித் துள்ளதாக அறிவித்துள்ளது. இது எதிர்காலத்திற்கான சுத்தமான எரிசக்தியாக கருதப்படும் இயற்கை ஹைட்ரஜன் கண்டுபிடிப்பில் மிகப்பெரிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.


பூமியின் அடியிலிருந்து 1,250 மீற்றர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த சுரங்கம் பூமியின் இயற்கையான செயல் முறைகளால் உருவாகும் ஹைட்ரஜன் வகை என வும், இதனை எரிக்கும் போது தண்ணீரை மாத் திரம் வெளியிடுவதால் சுற் றுச்சூழலுக்கு எந்த பாதிப் பும் இல்லை எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலும் மறுசுழற்சி செய்யக்கூடிய, சுற்றுச்சூழல் மாசற்ற எரிசக்தி ஆதாரம் என்பதால் எதிர்கால எரி சக்தியாக வெள்ளை ஹைட் ரஜன் கருதப்படுவதாகவும் இதனால் எந்த விதமான பச்சை வீட்டு வாயுக்களும் உருவாகாது எனவும் எனவே இது கார்பன் நீக்க மற்ற எரிசக்தியாகச் செயற் படுமெனவும் மாசு ஏற்படுத் தும் எரிசக்திகளுக்கு மாற் றாக இது பயன்படுத்தப்பட லாம் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இக்கண்டுபிடிப்பானது உலகளாவிய ஹைட்ரஜன் சந்தையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் இது உலகளவில் மீளச்சுழற்சி செய்யக்கூடிய எரிசக்திக்கான வரலாற்றுச் செயல்முறையாகக் கருதப் டுகின்றது எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்த க்கது. (நி)

# பிரிட்டன் நடு

# பற்றி எரியும்



(லண்டன்)

**வட கடற்பகுதியில் ரே திங்கட்கிழமை காலை கப்பல்கள் நடுக்கடலில் கொண்டன.**

இரண்டு கப்பல்களும் கிழக்கு யார்க்ஷர் கடற்கரை யில், பிரிட்டனில் உள்ள கிரிம்ஸ்பீ பகுதிக்கு அருகே மோதிக் கொண்டன.

ஸ்டெனா இம்மாகுலேட் கப்பல் ஜெட் எரிபொருளை எடுத்துச் சென்ற போது, வட கடலில் சோலாங் சரக்கு கப்பலால் மோதி விபத்துக் குள்ளானது.

எண்ணெய் எடுத்துச் சென்ற கப்பல் மற்றும் வேதிப் பொருட்களுடன் சென்ற சோலாங் என இர ண்டிலும் ஏற்பட்ட தீயா னது இரண்டாவது நாளாக வும் எரிந்து கொண்டிருக் கிறது.

ஆய்வு செய்த தரவுக ளின்படி, அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட ஸ்டெனா இம்மாகுலேட் என்ற டேங் கர் கப்பல் நங்கூரமிட்டிருந்த போது, போர்த்துக்கல் நாட் டில் பதிவு செய்யப்பட்ட சோலாங் எனப்படும் கன் டேய்னர் கப்பலால் மோதப் பட்டதாகத் தெரிகிறது.

அமெரிக்க நிறுவனமான க்ரோவ்லி, ஸ்டெனா இம் மாகுலேட் கப்பலின் ஆப ரேட்டர் மற்றும் இணை உரிமம் அமெரிக்காவின் க்ரோவ்லி நிறுவனத்தினு டையதாகும்.

ஃப்ளோரிடாவை தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் வெளி யிட்ட அறிக்கையில், "இந்த விபத் தில் தீ பற்றி எரிந்தது மற்றும் ஜெட் எரிபொருள் கப்பலில் இருந்து வெளியானது. கப்பலில் பல வெடிப் புகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஸ்டெனா இம்மாகுலேட் கப்பலில் இருந்தவர்கள் அதனை விட்டு வெளியேறினர். தற்போது ஊழியர் கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் மற்றும் கணக்கிடப் பட்டுள்ளனர்", என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

இரு கப்பல்களில் இருந்த 36 பேர் பாதுகாப்பாக இருப்பதாகவும் ஒருவர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்

## ஜேர்மனியில்

# விமான ஊழியர்கள் வெளிநடப்பு 40,000 பயணிகள் பாதிப்பு

(பேர்லின்)

ஜேர்மனியில் இடம் பெற்ற பாரிய பணி பகிஷ்கரிப்பு காரணமாக விமான ஊழியர்கள் வெளிநடப்பு செய்ததால் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹம்பர்க் விமான நிலை யத்தில் கிட்டத்தட்ட 300 விமானங்கள் இரத்து செய் யப்பட்டன.

இந்த பணி பகிஷ்க ரிப்பு நடவடிக்கை குறி த்து எந்த அறிவிப்பையும் ஜேர்மனியின் வர்த்தகத் தொழிற்சங்கம் விடுக்க வில்லை.



காலை வேளை 10 விமானங்கள் சென்ற ... பின்னர் விமான நிலைய ஊழியர்கள் வெளிநடப்பு செய்ததாக ஹம்பர்க் விமான நிலையம் ஒரு அறிக்கையொன்றில் தெரி வித்துள்ளது.

இந்த பணிபகிஷ்கரிப் பினால் விமான நிலை யத்திற்கு வருகை தர விருந்த 144 விமானங் களும், புறப்படவிருந்த 139 விமானங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதனால் 40,000 இற்கும் மேற்பட்ட பய ணிகள் பாதிக்கப்பட்டுள்ள னர்.

தொழிற்சங்கம் 8 சத வீத சம்பள அதிகரிப்பு அதாவது, மாதத்திற்கு குறைந்தபட்சம் 350 யூரோக்கள் மேலதிக கொடுப்பனவு, மேலதிக விடுமுறை ஆகியவற்றை கோரி பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். (நி)




(வோஷிங்டன்)

தான் மட்டும் இணைய சேவையை நிறுத்தினால் உக் ரைன் நாடு முடங்கும் என எலான் மஸ்க் அந்நாட்டு ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டுக்கடலில் ம் கப்பல்கள்!

பில் நேற்று முன்தினம் காலையில் இரண்டு டலில் மோதி தீப்பற்றிக்



கிரஹாம் ஸ்டு வர்ட் தெரிவித்தார்.

இப்போது அனைவரும் கரைக்கு வந்துவிட்டனர். ஆனால் இதனால் ஏற்பட இருக்கும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து கவலைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கப்பலில் இருந்தவர்களைத் தேடும் பணி நிறுத்திக் கொள்ளப் பட்டுள்ள போதிலும், •ஒருவரை காணவில்லை என்பதை எச்.எம் கடலோர காவல்படை உறுதி செய்துள்ளது. காணாமல் போனவர் சோலாங் கப்பலின் ஊழியர் ஆவார்.

ஸ்டெனா இம்மாகுலேட் கப்பலில் இருந்த ஜெட் எரிபொருள் அமெரிக்க அரசாங்கத்திற்கு சொந்தமானது.

அமெரிக்க அரசு பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 10 எண்ணெய் கப்பல்களில் இந்தக் கப்பலும் ஒன்றாகும்.

மோதல் சமயங்களில் அமெரிக்க இராணுவத்துக்கு எரிபொருட்கள் கொண்டு செல்லவும், தேசிய அவசர காலங்களில் எரிபொருட்கள் கொண்டு செல்லவும் இந்த கப்பல் பயன்படுத்தப்படுகிறது.

டேங்கரில் இருந்து அடர்த்தியான புகை வெளியேறியதாகவும், பெரிய அளவில் தீ பற்றி எரிந்து கொண்டிருப்பதாகவும் இந்த விபத்து குறித்த வீடியோக்கள் காட்டுகின்றன.

மார்டைம் ஆப்டிமா வலைத்தளத்தின்படி, இந்தக் கப்பல் 2017 ஆம் ஆண்டு கட்டப்பட்டது, மேலும் அதன் எடை கிட்டத்தட்ட 50,000 தொன்கள் ஆகும்.

சோலாங் போர்த்துக்கல் நாட்டில் பதிவு செய்யப்பட்ட கன்டேய்னர் கப்பல் ஆகும். இது 2005 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. மேலும் 9,500 தொன் சரக்குகளை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது என்று மரைன் ஆப்டிமா வலைத்தளத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. (நி)

## கறுப்புப் பட்டியலில் சுவிஸ் இணைத்துள்ள அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்கா சுவிட்சர்லாந்தை கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதாக தெரிவித்து சுவிட்சர்லாந்தை அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை சுவிஸ் பொருளாதார விவகாரங்களுக்கான மாகாணச் செயலக இயக்குநரான ஹெலன் பட்லிகர் ஆர்டிடா தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்து, வர்த்தகத்தின் நேர்மறையான சமநிலையிலிருப்பதாலேயே அமெரிக்கா சுவிட்சர்லாந்தை கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாட்டில் இறக்குமதியை விட அது ஏற்றுமதி செய்யும் பொருட்களின் அளவு அதிகமாக இருந்தால், அது வர்த்தகத்தின் நேர்மறையான சமநிலை என அழைக்கப்படும்.

அதாவது, அந்த நாடு இறக்குமதிக்காக செய்யும் செலவைவிட, ஏற்றுமதி மூலம் அதிக வருவாய் பார்க்கிறது என்று அர்த்தம்.

இந்த காரணத்தினால் தான் அமெரிக்கா சுவிட்சர்லாந்தை கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளதாக ஹெலன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், நியாயமற்ற வர்த்தகம் செய்வதாக சுவிட்சர்லாந்தை குற்றம் சாட்டமுடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## முடங்கியது எக்ஸ்தளம்!

# சவால் விட்ட எலான் மஸ்க் சம்பவம் செய்த உக்ரைன்



உலகம் முழுவதும் எக்ஸ் தளம் நேற்று முன்தினம் ஒரே நாளில் மூன்று முறை முடங்கியது.

இந்நிலையில் எக்ஸ் தளத்தின் மீது சைபர் தாக்குதல் நடந்துள்ளதாகவும், இதன் பின்னணியில் உக்ரைன் உள்ளதாகவும் எக்ஸ் தளத்தின் முதலாளி எலான் மஸ்க் குற்றம்சாட்டியுள்ளார்.

ஃபாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்துக்கு மஸ்க் அளித்தப் பேட்டியில், "எக்ஸ் தளத்தின் மீது மிகப்பெரிய சைபர் தாக்குதல் நடந்துள்ளது. அந்தத் தாக்குதல் உக்ரைன் முகவரியில் இருந்து நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கணினியின் ஐபி முகவரி உக்ரைன் நாட்டில் இருந்தே அது நிகழ்த்தப்பட்டுள்ளதாகக் காட்டுகிறது" என்று தெரிவித்தார்.

உக்ரைன் நாட்டில் எலான் மஸ்கின் ஸ்டார்லிங்க் இணையச் சேவை வழங்கப்பட்டு வருகிறது. தான் மட்டும் இந்த சேவையை நிறுத்தினால் உக்ரைன் நாடு முடங்கும் என எலான் மஸ்க் அந்நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கு மிரட்டல் விடுத்திருந்தார்.



ரஷ்யா- உக்ரைன் போர் தொடர்பாக ஜெலன்ஸ்கிக்கும், டொனால்ட் ட்ரம்பிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டதன் பின்னணியில் எலான் மஸ்க் இந்த மிரட்டலை விடுத்திருந்தார். எனவே எலான் மஸ்க்கின் சவாலை அடுத்து அவரின் எக்ஸ் தளம் தாக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (நி)

ஜெலன்ஸ்கிக்கு மிரட்டல் விடுத்திருந்தார்.

ரஷ்யா- உக்ரைன் போர் தொடர்பாக ஜெலன்ஸ்கிக்கும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுக்கு துணைபோனால் சட்டநடவடிக்கை நிச்சயம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

**பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு உதவி செய்பவர்களைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில், குற்றச் செயல்களுடன் தொடர்பு டைய சந்தேக நபர்களுக்கு உதவி செய்பவர்கள் பொலிஸாரால் கைது செய்யப் படுவதுடன் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ரி)

# மீனவர் பிரச்சினை தொடர்பில் ஐ.நா அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் திட்ட சேவைகள் பிரிவின் தெற்காசியாவுக்கான பணிப்பாளர் சார்லஸ் கெலனன், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருடன் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள அமைச்சில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் ஐ.நாவின் திட்ட சேவைகள் பிரிவில் தெற்காசியாவுக்கு பொறுப்பாகவுள்ள முக்கிய பல அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வு பொறிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

கடற்றொழிலாளர்களுக்குரிய திட்டங்கள் மற்றும் அதற்கான ஐ.நாவின் பங்களிப்பு உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

அதேபோல அபிவிருத்தி துறைகளில் ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் பிரிவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது சம்பந்தமாகவும் அவதானம் செலுத்தப்பட்டது.

நாட்டில் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களின் மீளாய்வு சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேலும் இலங்கையின் பல்வேறு திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் பிரிவு வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார். (ரி)

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஞ் லைஃப் சுப பெத்தும்
புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
விளம்பர விபரணம்




2025 மார்ச் 31ம் திகதிக்கு
முன்னர் விண்ணப்பிக்கவும்.
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு
SLIC LIFE

தேசத்தின் காப்புறுதி நிறுவனமான ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் (SLIC Life) நாட்டின் எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்து பங்களித்து வருகிறது. மிகவும் இலாபகரமான அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் ஒன்றான, SLIC Life ஒரு பொறுப்பான பெருநிறுவனமாகவும், அது தான் செயற்படும் இடங்களில் சமூகங்களை திறம்பட வலுப்படுத்துகிறது.

2014 ஆம் ஆண்டில், SLIC லைஃப் நாடு முழுவதும் உள்ள அதன் ஆயுள் காப்புறுதியாளர்களின் குழந்தைகளுக்காக "ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் சுப பெத்தும் உதவித்தொகை" திட்டத்தைத் தொடங்கியது. இன்றுவரை, இந்த முயற்சி ரூ.200 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள 2,000இற்கும் மேற்பட்ட உதவித்தொகைகளை வழங்கியுள்ளது.

இந்த ஆண்டு புலமைப்பரிசில் திட்டம் தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரப் பரீட்சைகளில் சிறப்புப் பெற்ற 225 மாணவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படும். மூன்று தேர்வுகளிலிருந்தும் முதல் தரவரிசை பெற்ற 75 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரப் பரீட்சைகளில் பெறுபேறுகளின் அடிப்படையில், சுப பெத்தும் புலமைப்பரிசில் பெறத் தகுதியுள்ள மாணவர்கள், ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.20,000 இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 40,000 மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 50,000 நிதி உதவித்தொகையைப் பெறுவார்கள்.

விண்ணப்பங்களை இப்போது SLIC லைஃப் வலைத்தளம் மூலம் 2025 மார்ச் 1 முதல் 31 வரை விண்ணப்பிக்கலாம். இந்த உதவித்தொகை திட்டத்திற்கு online விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

மேலும் தகவலுக்கு, SLIC லைஃப் அதிகாரப்பூர்வ வலைத்தளமான www.sliclife.com ஐப் பார்வையிடவும் அல்லது 1377 ஐ அழைக்கவும்.

# இராசிபலன்

12.03.2025
மாசி 28, புதன்கிழமை
திரியோதசி முற்பகல் 10.43 மணிவரை
மகம் பின்னிரவு 5.03 மணிவரை

சுபநேரம் 4.52 - 6.22 மணிவரை
இராகுகாலம் 12.22 - 1.52 மணிவரை
மாசிமகம், நடேசர் அபிஷேகம்
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம் - உத்தராடம்

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடந்து கொள்வார்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும்.




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெற்றோர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




நண்பர்களிடம் ஒளிவு மறைவு இன்றிப் பழகுவீர்கள், குடும்பச் சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




மதிநுட்பத்தில் மகத்தான காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




அரை குறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், திதிக்கும் பயணம் இடம்பெறலாம்.




உடல் நலனில் இருந்த உபாதைகள் அகலும், உறவுகள் ஒற்றுமையாக இருக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தொழில் முனைவோர்கள்

## கௌரவிப்பு நிகழ்வு ஆனையிறவில்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்களும் இணைந்து நடத்திய 2025ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் ஆனையிறவு தேசிய உப்பளத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்களை மையப்படுத்தி "நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வலுவான வழிகாட்டி" எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) இ.நளாயினியின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், ஆனையிறவு உப்பளத் தின் முகாமையாளர் வி.சுகந்தன், சட்டத்தரணி ரா.சரண்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (நி-6-316)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கணனி உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் களஞ்சியப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

பொருட்கள் அன்றைய தினம் காலை 9.00 மணி முதல் பார்வையிட முடியும் என்பதுடன் கேள்வியில் பங்குபற்றுபவர்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு பணமாக ரூபா 500.00 ஐ சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். கேள்வியில் சித்தியடைவோர் உரிய தொகையினை முழுமையாக செலுத்தி அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

**இடம்: சாவகச்சேரி நகராட்சி மன்ற வளாகம்**
**காலம்: 25.03.2025 (செவ்வாய்க்கிழமை)**
**நேரம்: மு.ப 10.00 மணி**

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி.**

(சி-2441)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | மருதனார்மடம் | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 100-150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 700 | 500 | 700 | 600-650 |
| தக்காளி | 160 | 100 | 150 | 120-150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 200-250 |
| கோவா | 300 | 400 | 300 | 180 |
| கரட் | 800 | 1000 | 750-900 | 750 |
| பூசணி | 160 | 150 | 100 | 80-100 |
| புடோல் | 180 | 150 | 120 | 100-150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 80-100 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 200 | 250-300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 160 |
| பாகற்காய் | 300 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 300 | 200-250 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 200 | 150 |
| பயற்றங்காய் | 450 | 300 | 450 | 300-350 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 |
| பீற்றூட் | 200 | 150 | 150 | 180 |
| கறிமிளகாய் | 600 | 400 | 450 | 600 |
| முருங்கைக்காய் | -- | 1500 | 2500 | 2000 |
| போஞ்சி | 400 | 300 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 80 | 100 |
| கீரை – 1 பிடி | 120 | 150 | 100 | 60-70 |
| தேசிக்காய் | 250 | 100 | 250 | 200-250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 250 | 150-250 |
| இராசவள்ளி | 500 | 500 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 120 | 100 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 80 | 100 |
| வல்லாரை | 60 | 80 | 60 | 50 |
| ஈரப்பலா | 150 | 50 | 100 | 100 |

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

## இன்று 12.03.2025 மாசிமகம், கூத்தன் அபிஷேகம் தரிசிப்போம், ஈழத்துச் சிதம்பரம் கோயில், திக்கரை முருகன் ஆலயம், மற்றைய ஆலயங்களின் கும்பாபிஷேகம் தரிசித்து ஆடல்புரியும் இறைவனது திருக்கூத்தில் நாமும் கலந்து அருள்பெறுவோம்.

**நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி**
**உற்று உற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்**
**பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்**
**சிற்றம் பலமென்று தேர்ந்து கொண்டேனே.**

திருமந்திரம்-2770

நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி மனதை ஒருமுகப்படுத்திப் பொருந்த உற்று உற்றுப் பார்த்தால், ஐம்புலனடக்கி தியானித்தால், நாதத்தின் அஞ்செழுத்தாகிய மந்திர உருவில் ஒளிப்பிளம்பாக ஆடல் புரியும் இறைவனது திருக்கூத்துப் புலனாகும்.

**நம்பியாண்டார்-நம்பி அருளிய**
**கூத்தப்பெருமானை போற்றுங்**
**கட்டலித்துறை-பொய்ச் செல்வர்**
**செய்திடும் புன்மைகட்கு மாறாக**
**என்றும் அழிதல் இல்லாத அச்**
**செல்வத்தை அடைவதற்கு எம்பெரு**
**மான் பாதம் கருதி யாசிக்கிறேன்!**

11 ஆம் திருமுறை -1038

**நெஞ்சந் திருவடிக் கீழ் வைத்து**
**நீள்மலக் கண்பனிப்ப**
**லஞ்சம் கடிந்துன்னை வந்தித்தி**
**லேன் அன்று வானர் உய்ய**
**நஞ்சம் கருத்து பெருந்தகை**
**யேநல்ல தில்லைநின்ற**
**அஞ்செம் பவளவண் ணா அருட்(கு)**
**யாளினி யார் என்பவரே**

நெஞ்சத்தை உன்திருவடிக் கீழ் வைத்து கண்ணீர் அரும்ப, வஞ்சத்தை வெறுத்து ஒதுக்கி உன்னை வழிபடவில்லை. முன்பு தேவர்கள் பிழைக்க, ஆலகால விடம் குடித்து அருளிய பெருந்தகையே!

**திண்ணபுரத்தில் தில்லைக்கூத்தா, அழகிய செம்பவள வண்ணா, உன் அருளை விட்டு வேறு எங்கு போவேன். அருளை எதிர்பார்ப்பேன்.**

இவ்வாறு பொல்லாப் பிள்ளையார் உணர்த்தி அருளியபடி தில்லைக் கோயிலை சென்று அடைந்து தேவாரத்திரு முறைகளைக் காண விரும்பிய நம்பியாண்டார் நம்பிகள் கூத்தப் பெருமானைப் பரவிப் போற்றியது.

மாசி மகமான இன்று நடேசர் அபிஷேகம், மாணிக்கவாசகர் அபிஷேக மற்றும் பல ஆலயங்கள் அபிஷேகத்தினத்தில் திருவாசகம், திருமுறைகள், அபிராமி அந்தாதி எல்லாம் ஓதி ஈழத்துச் சிதம்பரம்கோயில், திக்கரை முருகன், இன்னும் பல ஆலயங்கள், புனருத்தானம் நிறைவாக நடைபெறவும், திருவிழாக்கள் நடைபெறவும் இலங்கை மக்கள் அனைவரும் பிரார்த்திப்போம்.

1883 ஆம் ஆண்டு திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் திருக்கூத்தன் பஞ்சகிருத்தியத் திருமேனி காணப் பூசை வழிபாடுகள் நிகழ்ந்து 1908 ஆம் ஆண்டு மந்திரம் மொழிந்து திருப்பீடம் ஏற்றிக் குடமுழுக்கு தரிசனம் காரைநகர், இலங்கை உலகம் அனைவரும் கண்டனர்.

இன்று 118 ஆவது வருடம் மாசிமகம் அபிஷேகம் வருடத்தில் ஆறு அபிஷேகம் நடப்பது எல்லா சிவன் ஆலய கூத்தனுக்கு ஆகும்.

**ஆலயத்தில் வேறு நாட்களில் கூத்தப் பெருமான் மேனியில் நீர்ப்பூசை இல்லை நீர் இல்லாத பூவால் பூசை செய்வது ஓர் சிறப்பாகும்,**


மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
**உண்டி கொடுத்தோர்**
**உயிர்கொடுத்தோரே**

மணிமேகலை

1926 ஆம் ஆண்டிலேயே மாணிக்கவாசகர் மடாலயம் முழுமைபெற்று அந்த ஆண்டு 11.12.1926 சனிக்கிழமை காலை மகாதேவ சுவாமிகள் மடாலயம் திரை நீக்கம் செய்து மாணிக்கவாசகர் பெருமான் திருவுருவம் ஸ்தாபிக்கப்பட்டு " மாணிக்கவாசகர் மடாலயம்" எனத் திருநாமம் சூட்டப்பட்ட நம்முன்னோர் அமைத்த ஞானச்சுடர் நிலையம் எனத் திருவாவடுதுறையில் கௌரவிக்கப்பட்ட ஓர் அருள்மிகு மடாலயம் ஆகும்.

அனைத்து ஊர் மக்களுடன் இலங்கை வாழ் அடியார்கள் இணைந்து

**மடமே மனிதப் பிறவிகள் முடங்கிப்**
**படம் போடும் பசிப்பிணிக்கு தானே**
**திடம்கொண்டன்ன தானம் படைப்பார்**
**அடங்கும் தில்லைச்**
**சிதம்பரம் என்றும் துணை**



**க.கு.க சிவபாலன், போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 722





அது யார் என்பது எனக்குத் தெரியவில்லை. சோழ குலத்தைச் சேர்ந்த யாராவது அந்தக் கொலைவாளுக்கு இரையாகப் போகிறார்களா அல்லது இந்தச் சோழ இராஜ்யத்தை இரண்டாகத் துண்டு செய்து நாசமாக்கப் போகும் கொலை வாளா? அது என்று தெரியவில்லை. நீயும் நானும் யோசித்து முயற்சி செய்துதான் அத்தகைய அபாயம் இந்நாட்டுக்கு ஏற்படாமல் தடுக்க வேண்டும்!" என்றாள் இளைய பிராட்டி.

"ஆம், அக்கா! வல்லவரையர் கூறிய விபரங்களிலிருந்து எனக்கும் அவ்வாறுதான் தோன்றுகிறது. முக்கியமான அபாயம், சோழ குலத்துக்கு யாரிடமிருந்து வரப் போகிறது என்பதை அறிவாய் அல்லவா?" என்றான் இளவரசன்.

"பழுவூர் இளையராணி நந்தினியைத்தானே குறிப்பிடுகிறாய், தம்பி? ஆம், அக்கா! அவள் யார் என்பதையும் அறிவாய் அல்லவா?" வந்தியத்தேவர் கூறிய விபரங்களிலிருந்து அதையும் அறிந்து கொண்டேன். ஆகையினாலேயே இவ்வளவு அவசரமாக உன்னைப் பார்க்க வந்தேன்!" என்றாள் குந்தவை.

### 45 ஆம் அத்தியாயம்
### வானதிக்கு அபாயம்

"அக்கா! ஐந்து வயதில் நான் காவேரி வெள்ளத்தில் மூழ்கியது நினைவிருக்கிறதா? காவேரித் தாய் என்னை எடுத்துக் காப்பாற்றிப் படகிலே விட்டு விட்டு மறைந்தது நினைவிருக்கிறதா?" என்று அருள்மொழிவர்மன் கேட்டான்.

"இது என்ன கேள்வி, தம்பி! எப்படி அதை நான் மறந்து விடமுடியும்? 'பொன்னியின் செல்வன்' என்று உன்னை அழைத்து வருவதே அந்தச் சம்பவத்தின் காரணமாகத்தானே?" என்றாள் குந்தவை.

"என்னைக் காப்பாற்றிய காவேரித் தாயை இலங்கையில் நான் கண்டேன், அக்கா!.. என்ன, பேசாதிருக்கிறாயே? உனக்கு ஆச்சரியமாயில்லை?"

"ஆச்சரியமில்லை, தம்பி. ஆனால் ஆர்வம் நிறைய இருக்கிறது. அவளைப் பற்றி எல்லா விபரங்களையும் சொல்!"

"ஒரு நாளில், ஒரு தடவையில், சொல்ல முடியாது. முக்கியமானதை மட்டும் சொல்லுகிறேன். காவேரி வெள்ளத்திலிருந்து என்னை அவள் காப்பாற்றியது மட்டுமல்ல இலங்கையில் பல தடவை என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாள். உயிரைக் காப்பாற்றியது பெரிதல்ல, அக்கா! எத்தனையோ பேர் தற்செயலாகப் பிறர் உயிரைக் காப்பாற்றுகிறார்கள். அவள் என்னிடத்தில் வைத்துள்ள அன்பு இருக்கிறதே, அதற்கு இந்த ஈரேழு பதினாலு உலகங்களும் இணையாகாது. ஏன்? நீ என்னிடம் வைத்துள்ள அன்பைக் கூட, அடுத்தபடியாகத்தான் சொல்ல வேண்டும்!"

"அதைச் சொல்வதற்கு நீ தயங்க வேண்டாம். உன்னிடம் என் அன்பு அவ்வளவு ஒன்றும் உயர்ந்தது அல்ல சுயநலம் கலந்தது. உண்மையைச் சொல்கிறேன், தம்பி! எனக்கு இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மைதான் முதன்மையானது. அதற்கு நீ பயன்படுவாய் என்றுதான் உன்பேரில் அன்பு வைத்திருக்கிறேன். அந்த நோக்கத்துக்கு நீ தடையாயிருப்பாய் என்று தெரிந்தால், என் அன்பு வெறுப்பாக மாறினாலும் மாறிவிடும். ஆனால் அந்த ஊமைச் செவிட்டு ஸ்திரீயின் அன்பு அத்தகையதல்ல.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தன்னலமற்ற சேவை

(நேற்றைய தொடர்ச்சி)

காவலர்களை அனுப்பி அந்தச் சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண் மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

காவலர்களும் நகர் முழுவதும் சுற்றித் திரிந்து கடைசியில் ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர் தான் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன், அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உங்களுடையது தானா?" என்று கேட்டான்.



கிழவி கண்களை நன்கு துடைத்துக் கொண்டு சலவைக் கல்லைப் பார்த்தாள். பிறகு, "ஆம் அரசே அது என்னுடைய பெயர் தான் தவறுதலாகப் பொறிக்கப்பட்டு விட்டது போல் இருக்கிறது!"

"இல்லை அம்மா, என் பெயர் தான் முதலில் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்து விட்டுத் தங்கள் பெயரை இதில் பொறித்து விட்டுச் சென்றிருக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை" என்றான் அரசன்.

"நான் இந்தப் பக்கம் வந்தது கூட இல்லை. அப்படியிருக்க இதில் என் பெயர் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

தாயே, இந்தக் கோயில் பணியில் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறித்திருக்க மாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்னவென்று கூறுங்கள்!" என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி, ""மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை ஆனால், ஒன்று மட்டும் செய்திருக்கிறேன். இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றி வரும் வண்டிகள் நாள் தோறும் என் வீட்டுப் பக்கமாகத் தான் வரும். அந்த சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந்தீரத் தண்ணீர் கொடுப்பேன். மோர் கொடுப்பேன். குதிரைகளுக்குச் சிறிது புற்களை கொடுத்து தண்ணீர் காட்டுவேன். அவ்வளவுதான் நான் செய்தது," என்றாள் கிழவி.

""தாயே! நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவே, தான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளான்.

தன்னலமற்ற தங்கள் தொண்டினை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றுமே எடுத்துக் காட்டும். வாழ்க தங்கள் புகழ் என்று கூறிய மன்னன். அந்தக் கிழவிக்கு நிறையப் பரிசுப் பொருட்களைக்கொடுத்து அனுப்பினான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான கண்ணோட்டம் மனதை திறந்து புதிய சாதனைகள் புரியும் புத்துணர்வைத் தருகிறது.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முள்முருக்கை மரத்துக்கு நேர்ந்த கதியோ தென்னைக்கும்

விவசாயத்தில் கவனம் செலுத்தாத எந்த நாடும் அபிவிருத்தியடைந்ததாக வரலாறு இல்லை.

உண்மை. அண்டை நாடான இந்தியாவின் எழுச்சி என்பது விவசாயத் துறையில் அந்த நாடு கொண்டிருக்கக்கூடிய முன்னேற்றம் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஆம், அசேதன முறையிலான விவசாயச் செய்கையைத் தவிர்த்து, மரபு ரீதியான சேதன முறையில் விவசாயத்தை முன்னெடுக்கின்ற இந்தியாவின் செயற்றிட்டம் பாரிய வெற்றியைக் கொடுத்துள்ளது.

ஆனால், ஒரு காலத்தில் ஆசியாவின் நெற் களஞ்சியம் என்று வியந்து போற்றப்பட்ட இலங்கையின் சமகால நிலைமை என்ன என்பது நீங்கள் அறிந்ததே.

இவ்வாறானதொரு வீழ்ச்சி நிலைக்கு மூல காரணம் என்ன என்பது அனைவரும் அறிந்தது.

தவிர, விவசாயத்துறை சார்ந்த ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் பூச்சியம் என்ற நிலையில், எங்கள் நாட்டின் விவசாயம் மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, எங்கள் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயத் திணைக்களங்கள் மற்றும் விவசாயம் சார்ந்த வெளிக்கள நடவடிக்கைகள் அனைத்தும் படுதோல்வி கண்டுள்ளன.

சுருங்கக்கூறின் இலங்கையில் விவசாயத் துறை என்பது அநாதையாகிவிட்டது. இருக்கக்கூடிய அனைத்துச் சேவைகளும் படுதோல்வி கண்டுவிட்டன.

நிலைமை இதுவாக இருக்கையில், காலப் பிழை போல் நம் மண்ணில் தென்னை மரங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈ தொற்று எங்கள் தென்னை மரங்களை முற்றாக அழித்துவிடும்போல் தெரிகிறது.

அதாவது எங்கள் தமிழர் பண்பாட்டில் திருமண பந்தத்தில் கன்னிக்கால் என்ற பெயரோடு உறவாடிய முள்முருக்கை மரம் தீராத நோய்க்கு ஆளாகி அழிந்து போயிற்று.

திருமணச் சடங்கில் வேதம் ஓதி, அக்னி வளர்த்து மாங்கல்யதாரணம் செய்கின்ற வேளை, அங்கு நாட்டப்படுகின்ற முள் முருக்கை மரத்துக்கு நோய் வந்துற்றபோது, அந்த நோயை அறிந்து அதற்கான தீர்வைக் காண்பதற்கு எங்கள் நாட்டில் எவரும் முன் வரவில்லை.

இதன் காரணமாக முள்முருக்கை இனத்தை நாம் இழந்துபோனோம்.

அந்த முள்முருக்கை வரிசையில் இப்போது தென்னை மரங்கள் எங்களை விட்டுப் பிரிவதற்காகக் காத்து நிற்கின்றன.

அந்தோ! காப்பாற்றுவார் யாருமில்லை. இந்தியாவில் இதே வெள்ளை ஈ தொற்று தென்னை மரங்களுக்கு ஏற்பட்டதாயினும், அதனை அந்த நாடு கனகச்சிதமாகக் கட்டுப் படுத்தியுள்ளது.

ஆனால் எங்கள் மண்ணில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

என்ன செய்வது முள்முருக்கை மரம்போல தென்னையையும் நாம் இழந்து விடுவோமோ என்ற ஏக்கம் மட்டுமே இப்போது எஞ்சி இருக்கிறது.

## பயங்கரவாத அச்சுறுத்தல் குறைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை

உலகிலேயே பயங்கரவாத அச்சுறுத்தல் குறைந்த நாடாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் உலகளாவிய பயங்கரவாதத்தின் தாக்கம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பயங்கரவாத குறியீட்டால் இந்தப் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார விஞ்ஞானம் மற்றும் சமாதானத்திற்கான சர்வதேச நிறுவனத்தால்பயங்கரவாதத் தாக்கத்தின் அடிப்படையில் நாடுகளின் தரவரிசையின்படி உலகளாவிய பயங்கரவாத குறியீடு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறியீட்டில் பரிசீலிக்கப்பட்ட 163 நாடுகளில் இலங்கை 100 ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக 12வது வருடாந்த பயங்கரவாத குறியீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இந்தக் குறியீட்டில் 36வது இடத்திலிருந்த இலங்கை, 64 இடங்கள் பின்தங்கி பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் குறைப்பதில் தெற்காசிய வலயத்தில் மிகவும் முன்னேறிய நாடாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த யுவதியுடன் பாலியல் உறவு

### துப்பரவுப் பணியாளர் கைது

யாழில் அரச வைத்தியசாலையொன்றில் மனநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளம் யுவதியொருவருடன் பாலியல் உறவு கொண்டார் என்ற குற்றச்சாட்டில், வைத்தியசாலையின் துப்பரவுப் பணியாளர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனநோயாளர் சிகிச்சைப் பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த யுவதியொருவர் அளித்த முறைப்பாட்டையடுத்து, அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியினால் பரிசோதிக்கப்பட்ட பின்னர், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யுவதியைக் காதலிப்பதாகவும் திருமணம் செய்வதாகவும் சந்தேகநபர் கூறியதையடுத்து அவர்களுக்குள் வைத்தியசாலை வளாகத்துக்குள்ளேயே பாலியல் உறவு ஏற்பட்டதாக யுவதியின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனக்குத் திருமணம் நிகழ்ந்து குழந்தைகள் உள்ளதையும் அவர் யுவதியிடம் மறைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் வைத்தியசாலையின் ஏனைய சிலருடன் பேசிய யுவதி அந்த நபரை காதலிக்கலாமா என வினவிய போது, அந்த நபருக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ள விவகாரத்தை அவர்கள் குறிப்பிட்ட பின்னர், யுவதி இந்த விவகாரத்தை விடுதிக்குப் பொறுப்பான வைத்தியரிடம் முறையிட்டதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதைத் தொடர்ந்து யுவதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியினால் பரிசோதிக்கப்பட்டு அறிக்கையிட்டதைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.(ம-7)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் குறுகியகால கணனி பயிற்சிநெறிக்கான (Short Course in Computer literacy) கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 25.03.2025 ற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-7)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (Listening & Speech in English) குறுகிய கால கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 30.03.2025 ற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-7)

மட்டக்களப்பு கரடியனாறில்

## உணவு ஒவ்வாமையால் 52 மாணவர்கள் பாதிப்பு

மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்திலுள்ள பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (11) விற்கப்பட்ட உணவு உண்டதில் ஒவ்வாமை காரணமாக 52 மாணவர்கள் சுகவீனமுற்ற நிலையில் கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் இடைவேளை நேரத்தில் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலையில் நூடில்ஸ் வாங்கி உண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரடியனாறு மகா வித்தியாலயத்தில் தரம் ஆறு முதல் உயர்தரம் வரையிலான 21 ஆண்களும் 31 பெண்களுமாக 52 பேர் உணவு ஒவ்வாமை காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களில் மூவர் மயக்கமுற்ற நிலையிலும் ஏனையவர்களுக்கு வாந்தி மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டதன் காரணமாக பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அயலவர்களின் உதவியுடன் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## காட்டு யானை தாக்கியதில் கடற்தொழிலாளி மரணம்

மாத்தறையில் காட்டு யானை தாக்கியதில் கடற்தொழிலாளி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

திஸ்ஸமஹாராமை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய கடற்தொழிலாளியே உயிரிழந்துள்ளார்.

இவர் கடற்தொழிலுக்காக மேலும் இரண்டு நபர்களுடன் இணைந்து கிரிந்த துறைமுகத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது அவ்வீதியால் சென்ற காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைக் கற்றாளையில் நோய் பீடைத்தாக்கமும் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!


எம்மவர் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வழிமுறைகளுள் மூலிகைப் பயிர்ச்செய்கை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கப்பட்ட தாவரங்களை பரந்த நிலப்பரப்பில், பயிர்செய் நிலங்களில் இன்னும் சாடிகளில், பொலித்தீன் பைகளில் வளர்த்து அவற்றிலிருந்து வருவாயைப் பெறும் வாய்ப்புக்களை மக்கள் எதிர்பார்த்திருக்கின்ற அதே வேளையில் பலருக்கு இதன் மூலம் வருமானமும் கிடைத்திருக்கின்றது. அத்துடன் எமது பிரதேசத்திலுள்ள மூலிகைகளை வர்த்தகரீதியில் வளர்த்து அதனைப் பயன்படுத்தும் நோக்கில் தற்போது பல மூலிகைப் பயிர்கள் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு வளர்க்கப்படும் மூலிகைத்தாவரங்களுள் பிள்ளைக் கற்றாளையும் (Aloe vera) ஒன்றாகும்.

வாழ்வாதாரத்தை வளர்த்தெடுக்கும் நிறுவனமொன்றின் தகவலுக்கமைய பிள்ளைக் கற்றாளை வளர்க்கப்படும். நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள வயலும் வயல்சார்ந்த வனப்பகுதியை செப்பனிட்டு ஏறக்குறைய 500 பிள்ளைக் கற்றாளை தாவரங்கள் பிளாஸ்ரிக் பைகளில் வளர்க்கப்படுகின்ற இடத்தில் பலவற்றில் இலைப்பகுதியில் அழுகல் ஏற்பட்டு தாவரங்களில் வாடல் நோயேற்பட்டதை கடந்த வாரம் அவதானிக்க முடிந்தது. அறுவடைக்கு தயாரான நிலையில் இலைகளில் இவ்வாறு அழுகல் ஏற்பட்டதனால் பிள்ளைக் கற்றாளையிலிருந்து எந்தவித பயனையும் பெறமுடியாமல் போயிருக்கின்றது.

வருவாய் கைக்கெட்டிய நேரத்தில் இவ்வாறான அழுகல் நோயேற்பட்டுள்ளதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு விவசாய உயிரியல் துறையை அணுகியுள்ளனர். இவ்வாறு பலர் தற்போது பிள்ளைக் கற்றாளையில் முதலிட்டு பெரியளவில் நடுகை செய்திருக்கின்றனர் எனவும் அறியமுடிந்தது. ஆனால் பலரது பிள்ளைக் கற்றாளையில் இலையழுகல் ஏற்பட்டுள்ளதோடு தாவரத்தினடியில் இந்த அழுகல் காணப்படுவதனாலும் தாவரம் முற்றிலுமாக சோபையிழந்து வாடுவதனை அவதானிக்க முடிந்தது. இலையழுகல் அடிப்பகுதியிலும் இடைப்பகுதியிலும் காணப்படுகின்றது. இதனால் இலைகள் சேதமடைந்து அழுகி துர்நாற்றமும் வீசத் தொடங்கியிருக்கின்றது.

பிள்ளைக் கற்றாளையில் இலைதான் முக்கியமான சந்தைப்படுத்தப்படும் பாகமாகும். இவ்விலையை தாழ் எனவும் கூறுவர். இவ்வாறான இலை விரிந்து பருத்து அதிகளவில் "ஜெல்" (Gel) எனப்படும் சதைப்பொருள் அடங்கியிருந்தால் இலையும் சீரானதாக காயமின்றி கீறலின்றி வேறுஏதும் சேதமின்றி சிறந்ததாக பச்சையாக இருந்தால் அதற்கான விலை அதிகம். மேற்கூறிய தாக்கங்கள் இவ்விலையில் காணப்படும் போது அதற்கான கேள்வி குறைவடைந்து வாங்குபவர்களும் அதனை தவிர்க்கும் நிலை காணப்படுகின்றது. ஆக இங்கே தரம் என்பது சிறந்த சேதமேதுமற்ற இலையிலேயே தங்கியிருக்கின்றது. ஆனால் மூலிகைப் பயிரென்றாலும் அதனை நாம் வர்த்தக ரீதியில் வளர்க்க முனையும் போது நோய் மற்றும் பீடைகள் வந்தேறி விடுகின்றன. வீட்டில் சாடிகளில் ஓரிரு தாவரங்கள் வளர்ந்திருக்கும் போது அதிலும் கவனிப்பின்றி வளர்ந்திருப்பவை நன்றாக, சிறப்பானதாக, தரமானதாக இருப்பதனை அனைவரும் அவதானித்திருக்கின்றனர். ஆனால் வர்த்தக ரீதியில் வளர்க்க முனையும்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



போது பிரச்சினைகளும் வந்து விடுகின்றன. அவ்வாறான பிரச்சினை பிள்ளைக்கற்றாளை வளர்ப்பிலும் ஏற்பட்டிருக்கின்றது. பிள்ளைக் கற்றாளை வளர்ப்பவர்களின் நலன் கருதி அவை பற்றிய விளக்கங்களும் அவற்றை எவ்வாறு தவிர்ப்பது அல்லது முகாமைத்துவப்படுத்துவது என்பன பற்றி மேற்கொண்டு இக்கட்டுரை விளக்குகின்றது.

பிள்ளைக் கற்றாளை ஒரு சதைப்பிடிப்பான மூலிகைத் தாவரம். கரையோரப் பிரதேசங்களிலும் மணற்பாங்கான நிலத்திலும் கல்லுப் பூமியிலும் இவை வளர்வதனை அவதானிக்கலாம். கடற்கரைப் பிரதேசத்தில் சிறப்பாக வளரக்கூடிய இத்தாவரத்தின் வேர்த்தொகுதி விரைந்து நீரை அகத்துறுஞ்சும் தன்மையுடையது. ஆனாலும் தேவை யானளவு நீரை மட்டும் அகத்துறுஞ்சும் ஆதலால் நீர் அதிகமாக இருந்தால் வேர்த்தொகுதியை வெகுவாக பாதிக்கும். நீர் அதிகமாக தேங்கினால் அது பிள்ளைக் கற்றாளை தாவரத்திற்கு ஏதுவானதாக இருக்காது. அதனால் அதிகம் மழை காலங்களில் இன்னும் நீர்தேங்குமிடங்களில் பிள்ளைக் கற்றாளை வளர்க்கக்கூடாது.

**பிள்ளைக்கற்றாளையில் பின்வரும் நோய்ப்பீடைத் தாக்கங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.**

1. பக்ரீறிய இலையழுகல் நோய்: இந்நோயை ஒருவகை டிக்கேயா கிறைசாந்தெமி எனப்படும் ( Dickeya chrysanthemi) பக்ரீறியா ஏற்படுத்துகின்றது. இந்நோயை ஏற்படுத்தும் பக்ரீறியா வெறுமனே தாவரத்தின் உள்ளே தானாக சென்றுவிடும் திறனற்றது. அதனால் இவற்றின் உட்புகுதலுக்கு தாவரப்பாகத்தில் காயமோ, கீறலோ அல்லது உரசலோ ஏற்பட்டால் அதனூடாக இவ்வாறான பக்ரீறியாக்கள் உட்புகுந்து விரைந்து பெருகத்தொடங்கிவிடும். பக்ரீறியா உட்புகலோடு அந்த இடத்தில் விரைந்து பெருகி தாவரம் முழுவதும் பெருகிவிடும். இவ்வாறு பரவத் தொடங்கிவிட்டால் பின்னர் நோய் பரவலைத் தடுக்க முடியாது. அழுகி வரும் பாகங்களிலிருந்து பக்ரீறியா கலங்கள் வெளிவந்து நீருடன் பரவ ஆரம்பித்துவிடும். வயலும் வயல் சார்ந்த இடமாதலால் இவ்வாறான இடங்களில் நீரதிகம் காணப்படுவதனால் பொலித்தீனிலுள்ள துளைகளூடாக மேல்நோக்கி நீர்வர வாய்ப்புக்களும் உண்டு. இதனால் வேர்த்தொகுதி பாதிக்கப்பட்டு தாவரம் வாடல் நிலைக்கு சென்றுவிடும். இவ்வாறான பிரச்சனையுள்ள இடங்களில் "வரம்பும் வாய்க்காலும்" (Ridge and furrow) என்னும் உத்தியைப் பயன்படுத்தலாம். மாறாக அதிக நீர்த்தன்மை உள்ள இடங்களில் இவ்வாறான பயிர்ச்செய்கையை செய்வதனைத் தவிர்ப்பது என்றும் நல்லது. காலநிலை மாறி மழைவீழ்ச்சி பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பெய்வது உகந்ததும் இல்லை. நிலம்பார்த்து பயிர்செய் என்பது இதனை மையப்படுத்தித் தான். பக்ரீறியா அழுகலுடன் வாடல் பரவத் தொடங்கினால் கட்டுப்படுத்துவது கடினம். அழுகலுக்குள்ளான பாகங்களை வெட்டியகற்றி அவற்றை ஆழக்கிடங்கினுள் போட்டு மூடிவிடுதல் நல்லது. நீரோட்டத்தில் பக்ரீறியா பரவுகின்ற காரணத்தினால் தொடர்ந்து நீர்ப்பகுதியான இடங்களைத் தவிர்த்து பிள்ளைக்கற்றாளை தாவரகொள்கலன் களை மாற்றி வைத்தல் நன்று.

2.இலைப்புள்ளி மற்றும் நுனி வெளிறல்

பிள்ளைக் கற்றாளையில் இலைப்புள்ளி மற்றும் நுனிவெளிறல் ஏற்படுவதற்கு லசியோடேர்மா எனப்படும் பூஞ்சணம் காரணமாகும். குறிப்பாக இலையில் புள்ளிகள் ஏற்படுவதும் இலை நுனியில் வெளிறல் ஏற்படுவதனாலும் இலையின் தரம் குறைந்து விடுகின்றதுடன் நுகர்வோர் அதனை வாங்குவதில் பின்னிற்கின்றனர். நோய் கண்ட இலைகளை வெட்டியகற்றுவது நல்லது. மூலிகைத் தாவரமாதலால் கிருமிநாசினி பிரயோகிப்பதில் அவசியம் கவனம் தேவை. இயன்றளவு பீடைநாசினி களைத் தவிர்ப்பது நல்லது.

3. இலைகள் மஞ்சளாதல்

சத்துக்குறைபாடு காணப்பட்டால் இலைகள் மஞ்சளடையத் தொடங்கிவிடும். நைதரசனின் குறைபாடு இலைகள் மஞ்சளடைவதற்கு காரணமாகும். தாவரத்திற்கு தேவையான ஊட்டச்சத்தினை அதுவும் நன்றாக உக்கிய எருவாக போடுதல் வேண்டும். எருவுடன் மண்புழு உரம் மற்றும் கூட்டெருவைப் பயன்படுத்தலாம். தேவையான கூட்டெருவிட்டு மணல் மண்கலந்து நீர் இலகுவில் வடிந்தோடும் தன்மையில் மண்ணை தயார்ப்படுத்தி கொள்கலனினுள் பிள்ளைக் கற்றாளையை வளர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய நியமனங்...

சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இவற்றில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சுக்கு 2500 பேரும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு 1615 பேரும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். (ம-7)

(மற்றொரு செய்தி உள்ளே)

## நீதிமன்றில்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தல் அனுப்பியுள்ளது.

ரோயல் பார்க் கொலைச் சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஷ்ரமந்த ஜெயமஹாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பு உயர் நீதிமன்றினால் முன்னதாக இரத்துச் செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, மனித உரிமைகள் மீறப்பட்டதற்காக ஒரு மாதத்திற்குள் ஒரு மில்லியன் ரூபாயை இழப்பீடாகச் செலுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, மைத்திரிபால சிறிசேன இன்றுவரை அந்தத் தொகையைச் செலுத்தவில்லை என அறிவித்தார்.

அதன்படி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் முன்னிலையாகி இந்த இழப்பீட்டைச் செலுத்தத் தவறியதற்கான நியாயமான காரணத்தை முன்வைக்குமாறு கோரி அவருக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. (ம-7)

## கிராமசேவகர்...

இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிருஷ்ணபுரம் பகுதியில் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்துமாறு கிராமசேவகரிடம் சென்றபோது சரியான ஆவணங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என கிராமசேவகர் கூறியதையடுத்து ஏற்பட்ட வாய்த்தர்க்கத்திலேயே கிராமசேவகர் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (ம-7,316)

## குடும்பஸ்தரின்...

இராகலைத் தோட்டத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம் சந்திரபோஸ் (வயது-38) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் ஆவரங்காலப் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் பணிபுரிந்து வந்துள்ளார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ள நிலையில் விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

இந்நிலையில் இவர் கடந்த 9ஆம் திகதி கோப்பாய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குச் சென்று, அந்த வீட்டில் உள்ள ஆட்டுக் கொட்டகையில் உயிர் மாய்த்துள்ளார். இதனை அவதானித்த வீட்டில் உள்ளவர்களால் கோப்பாய்ப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சடலத்தை மீட்ட பொலிஸார் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு, உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக கொண்டு சென்றனர். நேற்றுச் செவ்வாய்க்கிழமை உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7)

## நியாயமான...

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் நேற்று அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் கூடியது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் வலி வடக்குப் பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள விகாரை தொடர்பில் குழுவில் வினவப்பட்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இனங்களுக்கிடையில் சுமுகத் தன்மையை உறுதிப்படுத்த அரசாங்கம் உரிய தலையீட்டை மேற்கொள்ளும். யாழ்ப்பாணம் வலி.வடக்குப் பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை அமைந்துள்ள இடத்திற்கு விஜயம் செய்து அதனைப் பார்வையிடவுள்ளேன். இதுவிடயத்தில் நியாயமான முறையில் தலையிட முடியும் என நம்புகின்றேன் என்றார். (ம-7)

## பெண் வைத்தியர்...

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணராகப் பயிற்சி பெற்று வரும் 32 வயதுடைய பெண் வைத்தியர் ஒருவர், நேற்று முன்தினம் இரவு வழக்கம்போல் பணிக்காக வைத்தியசாலைக்கு சென்றிருந்தார்.

குறித்த வைத்தியர், தனது கடமையை முடித்துவிட்டு இரவு 7 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து விசேட வைத்திய நிபுணர்கள் மட்டுமே வசிக்கும் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்றுள்ளார்.

வைத்தியர் அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் நுழைந்தபோது, பின்னால் இருந்து வந்த ஒரு நபர் திடீரென அவரது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் வைத்தியரின் வாயை அவர் கத்த முடியாதபடி இறுக்கமாகக் கட்டிய சந்தேக நபர், உத்தியோகபூர்வ இல்லத்தின் கதவைத் திறக்கச் சொல்லி, வைத்தியரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று, சத்தம் யாருக்கும் கேட்காதபடி கதவை மூடியுள்ளார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் குறித்த பெண் வைத்தியரின் கைகளைக் கட்டி, கண்களைக் கட்டி, கொடூரமாகப் பாலியல் பலாத்காரம் செய்திருப்பது தெரிய வந்துள்ளது. பின்னர் சந்தேகநபர் தப்பி ஓடிய நிலையில், வைத்தியரின் கைபேசியையும் திருடிச் சென்றுள்ளார். சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் வைத்தியசாலை வார்ட்டுக்கு வந்த வைத்தியர், தான் முகங்கொடுத்த சம்பவத்தைப் பற்றி அவரது தந்தைக்குத் தொலைபேசியில் அழைத்துத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்திற்குத் தகவல் தெரிந்த பின்னர், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அநுராதபுரம் மாவட்ட அதிகாரிகள் நேற்று அநுராதபுரம் பொலிஸில் முறைப்பாடளித்தனர். (ம-7)

## பெண் வைத்தியர் துஷ்...

தாஸ வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த சம்பவத்தினால் ஏனைய வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் அச்சத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அரச வைத்தியசாலையில் பணியில் இருக்கும் வைத்தியர் ஒருவர் இலக்கு வைக்கப்படுவது மிகவும் கவலையளிப்பதாகவும் பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பாக பாரிய கேள்வி எழுந்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (ம-7)

### மஹஜன சம்பத
திகதி 2025.03.11 சீட்டிழுப்பு இலக்கம் 5772
N 9 6 3 5 4 4
அத சம்பத: N 3 5 4 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0347

### தன நிதானய
திகதி - 2025.03.11 சீட்டிழுப்பு இலக்கம் - 1802
Y 24 40 60 70 Y
Double Chance 33905

### மெகா பவர்
திகதி 11/03/2025 சீட்டிழுப்பு இலக்கம் 2120
Q 24 15 19 41 78

### ஜய (JAYA)
திகதி 2025.03.11 சீட்டிழுப்பு இலக்கம் 040
W 6 2 2 2

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4014 சீட்டிழுப்பு திகதி 11.03.2025
M 21 48 73 75
M

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.11 சீட்டிழுப்பு இலக்கம் 1081
ரிஷபம் 06 20 34 59 ரிஷபம்
22139 — 07

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பால் (DLB)
11.03.2025 வெற்றி வாரம் 480
B 7 8 2 9 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,307,422.00
58473

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2746 சீட்டிழுப்பு திகதி 2025.03.11 தினம் செவ்வாய்க்கிழமை
04 15 25 65 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,563,722.40

### சனிதா
திகதி 11.03.2025 வெற்றி வாரம் 4907
24 56 72 77 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,492,796.80
85042

### சசிரி
வெற்றி வாரம் 640 சீட்டிழுப்பு திகதி 11.03.2025 செவ்வாய்க்கிழமை
18 21 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4458 சீட்டிழுப்பு திகதி 11.03.2025 தினம் செவ்வாய்க்கிழமை
20 25 46 53 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,266,742.00
263601

### கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 30 21 37 46 75
சீட்டிழுப்பு வாரம் 1922 — 11.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.568,142,072.80

### அட கோடிபதி (ADA KOTIPATHI)
செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் : 2572 — சீட்டிழுப்பு திகதி : 2025.03.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,862,243.20
11 19 22 60 H
587746

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**IELTS** - New Batch ஆரம்பம் 15.03.2025 - 10.30Am
(Academic - General and Life Skill A1)
இத்துடன் Basic & Advance English Grammar Classes
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
By : B.MURALI - 077 798 9830 (3641)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2447)
076 825 7716 (ஆகாஸ்)

**வேலைவாய்ப்பு**
எமது நிறுவனத்தில் பின்வரும் நிலைகளில் பணியாளர் வெற்றிடத்திற்கு ஆளணி உள்வாங்கப்படவுள்ளனர்.
- பொறியியலாளர் BSc(CIVIL)
- தொழில்நுட்ப அலுவலர் NDT, HNDE, NCT

Mary Construction, Koolavady East, Annaicoddai.
T.P No : 021 222 9198, 077 744 8076, 077 655 5395 (3623)
தெரிவு செய்யப்படுவோருக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**தேவை**
கே.கே.எஸ் வீதியில் இயங்கும் தவம் கருவாட்டு விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு
077 222 8312
134, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (3628)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

கோண்டாவிலில் இயங்கிவரும் எமது தனியார் கால்நடை வைத்திய நிலையத்திற்கு (PRIME VET CARE) பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை...
PRIME VET CARE Veterinary Hospital விலங்கு மருத்துவ நிலையம்
மேலதிக தகவல்களிற்கு :
077 074 3671, 075 709 7497 (920)

**காணி விற்பனைக்கு**
நீர்வேலிச் சந்தியில் அருமையான சூழலில் 7 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
074 38 25 961
076 91 97 566
077 46 87 645 (3583)

**UK BUSINESS VISITOR VISA**
லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET
வர்த்தக கண்காட்சியில்..
உங்கள் வியாபாரத்தினை (பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள்) நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த
- விசா விண்ணப்பங்கள்
- STALL BOOKING
- HOTEL BOOKING
- RETURN AIR TICKET
- பயண ஒழுங்குகள்

போன்ற அனைத்து சேவைகளுக்கும்
தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777 (C-2446)

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி பத்மநாதன்



மண்ணில் 05.12.1947 விண்ணில் 11.03.2025

வீரபத்திரர் கோவிலடி கெருடாவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி பத்மநாதன் அவர்கள் நேற்று 11.03.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரகாந்தன், காலஞ்சென்றவர்களான ரவிச்சந்திரன்(S.K பாம்), ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 12.03.2025 புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
ப.ரவிச்சந்திரன்(S.K பாம்) (குடும்பம்)
வீரபத்திரர் கோவிலடி, கெருடாவில் வடக்கு, சாவகச்சேரி. 076 682 0525 (919)

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 - 09 - 1935



இறப்பு 11 - 03 - 2025

## திருமதி சின்னாச்சி கணபதிப்பிள்ளை

புலோப்பளை மேற்கு, பளையை வசிப்பிடமாகக் கொண்ட சின்னாச்சி கணபதிப்பிள்ளை நேற்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, தெய்வேந்திரம் (இமையாணன்), பூமணி, காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் உதயகுமார் (ஓய்வுபெற்ற அதிபர் - பளை மத்திய கல்லூரி), விஜயரட்ணம் (இமையாணன்), ரூபசுகந்தினி (ஆசிரியர் - கிளாலி R.C.T.M.S, தர்மக்கேணி G.T.M.S), பவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராசா, சரஸ்வதி, மஞ்சுளாதேவி, திருமேனி, யூட்வினித்தா (ஆசிரியர் - நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்), விஜயகலா, நித்தியானந்தராசா, காலஞ்சென்ற அன்ரனி ஜஸ்ரின் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வைகுந்தவாசன் மற்றும் கௌசல்யா, பிரதீபன், பிரேமினி (பிரதேச சபை - பளை), சுலக்சனா, நிலானி, தயாளினி (ஆசிரியர் - முன்பள்ளி தம்பகாமம்), றஜீவன், தர்சினி (லண்டன்), சர்மிலா (லண்டன்), கிருஷாந்தன், சசிகலா (பிரான்ஸ்), லூர்த்தகவி (ஆசிரியர் - பளை மத்திய கல்லூரி), ஜெயமாலினி (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிராந்திய உ.ஆ.அ. யாழ்ப்பாணம்), விஜிதா, சுகிர்தா (ஆசிரியர் - யா/கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம்), நிர்மல்ராஜ், தர்சா, அருள்ராஜ், திவ்வியராஜ், தேனுகானி (லண்டன்), சங்கீர்த்தன், ஹரிஹரன், துஷ்யந்தி, அபிஷேக், நிதர்சனா, கேசிகா, சுஹானுஜன் ஆகியோரின் பிரியமான பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2025) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2 மணியளவில் புலோப்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 656 9933 (C-2445) தகவல் : குடும்பத்தினர்

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### உடனடி வேலைவாய்ப்பு - உபவிடுதிக் காப்பாளர் ஆண், பெண்

எமது சங்கத்தின் பராமரிப்பில் இயங்கும் சிறுவர் இல்லங்களான உரும்பிராய் கருணை இல்லம் (பெண்கள்), திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லம் (ஆண்கள்) ஆகியவற்றில் உபவிடுதிக் காப்பாளர் பணிக்காகத் தகுதி வாய்ந்த ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள் / அனுகூலங்கள்
- வயதெல்லை 25 – 55
- கல்வித் தகைமை க.பொ.த சா/த கனிதம் உட்பட 6 பாடங்கள் சித்தியுடன் அல்லது அதற்கு மேற்பட்டது.
- உணவு தங்குமிடம் வழங்கப்படும்.
- ஆண்கள் இல்லத்திற்கு ஆண்களும் பெண்கள் இல்லத்திற்கு பெண்களும் நியமிக்கப்படுவர்.
- சம்பளம் ஊக்குவிப்பு தொகை உள்ளடங்கலாக ரூபா 40,000.00 வரை.
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றவேண்டியிருக்கும்.
- வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும்.
- துறைசார்ந்த கல்வி / அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை.
- கிராமசேவகர் நற்சான்றிதழ் அவசியம்.

சுய விபரக்கோவையினை 18.03.2025 இற்கு முன்பதாக தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

சைவ வித்தியா விருத்திச்சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 6525

த.தவரூபன்
செயலாளர் (C-2442)

நீங்காத நினைவுகளுடன்

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## Lion வைரமுத்து சுப்பிரமணியம்

[ முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் (K.K.S), முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ( வலிகிழக்கு ) ]

தோற்றம் 17.04.1947 மறைவு 08.03.2020

திதி : 12.03.2025

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய் அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன் உற்றார் உறவினர்க்கு என்றும் உதவிக்கரம் நீட்டி தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர் சிறப்பிற்கும் வழிகாட்டி கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்.

கோப்பாய் மத்தி, கோப்பாய். (3640)
இங்ஙனம் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.